



சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் இந்தி திணிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் சிந்தாதிரிப்பேட்டையில் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஜி.ஜெ.கிரிதரன் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர், 9 வது மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், 62 வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன் எம்.சி ஆகியோர் வரவேற்புரையில் வழக்கறிஞர் ப.பிரகாஷ், பி.பாலசந்தர், பி.பிரவீன்குமார், கே.தனுஷ், ஆர். மனோஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், கழக இளம் பேச்சாளர்கள் கோகுல், மாறன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். இதில் கே. மகேஷ், பி.பிரபாகரன், எம்.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், வி.தினேஷ்குமார், கே.குட்டி, ஜே.எம். எஸ்.இம்ரான் ஆருண், என்.மோகனவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். என்.சுரேஷ், என். குமரன் நன்றி கூறினர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும்

# தண்ணீர் பந்தல் - மோர் பந்தல் அமைக்க வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!



காஞ்சிபுரம், மார்ச்.8-

கழகத் தலைவர் வேண்டுகோளுக்கிணங்க பொது மக்களை கோடைக் கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், தி.மு.க. சார்பில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் முழுவதும் “தண்ணீர் நீர்மோர் பந்தல்” அமைக்க வேண்டும்! என்று மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு வருமாறு :

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் கோடைக்கால வெப்பம் அதிகரிக்கத் தொடங்கிவிட்டது, மார்ச்மாத துவக்கத்திலேயே வெப்பம் அதிகரித்துள்ள நிலையில் தமிழக மக்களை இக்கோடைக்கால வெப்பத்திலிருந்து காக்கும் வகையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தண்ணீர் பந்தல் அமைக்க வேண்டும் என்ற அறிவிப்புக்கிணங்க,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர -ஒன்றிய-நகர- பகுதி-பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வார்டு கழக செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாச்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் மக்கள் அதிகம் கூடும் இடங்களான தெருமுனைச் சந்திப்புகளிலும், சாலை மற்றும் தெருக்கள் ஒரமாகவும், போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் யாருக்கும் எவ்விதமான இடையூறும் இல்லாமல் “தண்ணீர் பந்தல்” அமைத்து பொதுமக்களின் தாகம் தீர்த்திட, தண்ணீர் பந்தல் அமைத்து அதில் குடிநீர், நீர்மோர், இளநீர், குளிர்பானம், தர்பூசணி போன்ற கோடை வெப்பத்தை தணிக்கும் பொருட்களை பொது மக்களுக்கு வழங்கி, அவர்களின் தாகத்தை தணிக்க வேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன்அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### மாமன்ற உறுப்பினர் எஸ்.கனிமொழி சுரேஷ் ஏற்பாட்டில்

# மாதவரத்தில் முதல்வர் பிறந்த நாள் - மகளிர் தினவிழா - நலஉதவிகள்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் வழங்குகிறார்! எஸ்.நந்தகோபால் எம்.சி. பங்கேற்பு!

சென்னை, மார்ச்.8-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழா மற்றும் சர்வதேச உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகள் மகளிர் 150 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (8.3.2025 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் புனித ஜெபஸ்தியார் ஆலயம், தபால் பெட்டி, மாதவரத்தில் நடைபெறுகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக செயலாளரும் சி.எம்.டி.ஏ. உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. விழாவிற்கு தலைமை ஏற்று நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் இவ்விழாவில் மாதவரம் 3வது மண்டல குழு தலைவரும் 25வது வட்டக் கழக செயலாளருமான எஸ். நந்தகோபால் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை 28 வது வார்டு மாமன்ற உறுப்பினரும் நகரமைப்பு நிலை குழு உறுப்பினருமான திருமதி எஸ்.கனிமொழி சுரேஷ் எம்.சி. சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

# தூய்மைப் பணியாளர்கள் நலன் தொடர்பான கூட்டம்!

சென்னை, மார்ச்.8-

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவர் மா.வெங்கடேசன் தலைமையில் தூய்மைப் பணியாளர்கள் நலன் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று (07.03.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஒப்பந்ததாரரிடம் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களிடம் கலந்துரையாடி, அவர்களது கருத்துக்கள் கேட்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் தங்கள் பணியின்போது கையுறை, காலணி, முகக்கவசம் உள்ளிட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பணியாற்றுதல், இதற்கான நடவடிக்கைகளை உரிய அலுவலர்கள் மேற்கொள்ளுதல், தூய்மைப் பணியாளர்களுக்கான ஊதியத்தினை முறையாகக் கணக்கிட்டு சரியாக வழங்குவதை உறுதி செய்தல் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர் நலன் தொடர்பாக தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவர் அறிவுறுத்தல் வழங்கிப் பேசினார். மேலும், இக்கூட்டத்தில் அனைத்து தொழில் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) வி.ஜெயசந்திர பானு ரெட்டி, வட்டார துணை ஆணையாளர்கள் எம். பி.அமித், (தெற்கு), கே.ஜெ. பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு) மற்றும் அலுவலர்கள், தொழில் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 உட்பட்ட பகுதிகளில் குடிநீர் குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் துணை ஆணையர் முன்னிலையில் உதவி செயற்பொறியாளர் பொறியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. வார்டுகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காணுமாறு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டு அதிகாரிகளுக்கு வலியுறுத்தப்பட்டது.

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 16-வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!





தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 16 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவக்ளின் இனிய பிறந்தநாளில் நேற்று (07.3.2025) திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 1) எஸ்.எஸ்.புரம், ஏ.பிளாக், முதல் தெரு, சரவணா பாலாஜி தியேட்டர் அருகில், சென்னை. (75 அ வட்டம்)

2) வெங்கட அம்மாள் சமாதி தெரு, ஐந்து விளக்கு அருகில், சென்னை (76 வது வட்டம்) ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இ ந் நி க ழ் ச் சி யி ல் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமி கண்ணு, பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ் செல்வி, எஸ்.சசிகுமார், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம். தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன். இத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்ப் பெருமாட்டி ஔவையார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர் பெருமக்கள் பங்கேற்பு!

சென்னை, மார்ச்.8-

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருக்கும் புலவர் பெருமாட்டியருள் ஔவையாரின் அருமைத் திருப்பெயர் என்றும் அழியாமல் நிலைத்திருக்கும் திருப்பெயரும் தவப்பெயருமாகும்.

‘அகர முதல எழுத்தெல்லாம்’ என்பது போல ஔவை முதல அறிவெல்லாம் என்று அறிவுக்கே உரிய பெயராக ஔவையார் ஆண், பெண், இளைஞர், முதியர் ஆகிய எல்லோராலும் வழிபாட்டுணர்ச்சியோடு வணங்கப்படுகிறார்.

அதியமானுக்காகக் காஞ்சியிலிருந்து ஆட்சிப்புரிந்த தொண்டைமானிடம் தூது சென்று நிகழவிருந்த போரை நிறுத்திய பெருமை மிக்கவர் ஔவையார். உலக வரலாற்றில் இரண்டு வேந்தர்களுக்கிடையில் தூது சென்ற பெண்மையர் திலகமாகப் பெருமை கொண்டவர் ஔவையார் ஆவார்.

சேரமான் மாரிவண்கோவும், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் ஒருங்கிருப்பக் கண்டு உவந்து’ என்றும் தமிழ் மூவேந்தர்கள் இவ்வாறே இருப்பீர்களாக’ என அறிவுறுத்திய புலமைச் செல்வியர் ஆவார். நெடுமான் அஞ்சி போர்க்களத்தில் வேல் பாய்ந்து இறந்தபோது, ஔவையார் வருந்திப் பாடிய கையறுநிலைப் பாட்டு நெஞ்சம் உருக்கம் தன்மை வாய்ந்தது.

சங்கப் புலமைப் பெரும் செவ்வியராகிய இப்பெருமாட்டியார் பாடியனவாக உள்ள ஐம்பத்தொன்பது பாடல்களுள் அகப்பொருள் பற்றியன இருபத்தாறாகும். எஞ்சிய முப்பத்து மூன்று பாடல்களுள் புறப்பொருளுக்குரியனவாய்ப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. ஔவை பெயரில் வழங்கும் பிற்கால நீதிநூல்களும் உள்ளன.

மாந்தர் குலத்திற்குப் பெருமை சேர்த்த ஔவை பெருமாட்டியாரைப் போற்றும் வகையில் உலக மகளிர் நாளான 08.03.2025 சனிக்கிழமையன்று காலை 9.30 மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சித் துறையால், சென்னை காமராசர் சாலையில் (மெரினா கடற்கரை) அமைந்துள்ள ஔவையாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தலும், தமிழ்ப் பெருமாட்டியின் திருவுருவப்படத்திற்கு மலர் வணக்க நிகழ்வும் நடைபெற உள்ளன.

அமைச்சர் பெருமக்கள், மேயர், துணை மேயர், அரசு உயர் அலுவலர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொதுமக்களும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

### புழல் எம். நாராயணன் தலைமையில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் நினைவு நாள் - நல உதவிகள்!

சென்னை, மார்ச்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் உள்ள டீ கப் மினிஸ்டரிஸ் முதியோர் காப்பகத்தில், இனமான பேராசிரியர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பேராசிரியர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் முதியோர் காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சியும், அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு இனமான பேராசிரியரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து கழக நிர்வாகிகள் பொதுமக்கள் என அனைவரும் பேராசிரியரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். பேராசிரியர் புகழ் ஓங்குக, கலைஞரின் புகழ் ஓங்குக என்று கோஷமிட்டு பேராசிரியரின் நினைவு நாளை அனுசரித்தனர்.

பின்னர் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் காப்பகத்தில் வசிக்கக்கூடிய முதியவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கான உதவிகள் காப்பகத்தின் நிர்வாகியிடம் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வட்ட நிர்வாகிகள் சி. பாலாஜி ,சி. மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகபிரியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவகுமார், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் டி. வினோத், ஜி. ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச்.பீர் முகமது, 23வது வட்ட துணை செயலாளர் வக்கீல் டி. ராஜாராம், பகுதி பிரதிநிதிகள் எஸ். முத்துவேல்,அப்துல் சமது, தீயம்பாக்கம் இ. சுதர்சன்,எம். ஜான்சன், ஜி. பூபாலன், எஸ். ஜோசப் என்கின்ற விஜயன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன், எம். மைக்கேல், பி.செந்தில், என்.நாகராஜன்,டி. திவாகர் வி.சுமீர் வழக்கறிஞர் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, 17 வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள முதியோர் காப்பகத்தில், பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், பேராசிரியர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி, காப்பகத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில்,சி. பாலாஜி, சீ. மூர்த்தி, கே. சண்முகப்ரியன், எஸ். சிவக்குமார், டி. வினோத், ஜி. ராஜ்குமார், எச். பீர்முகமது, வக்கீல் டி. ராஜாராம், எஸ். முத்துவேல், அப்துல் சமது, இ .சுதர்சன், எம். ஜான்சன், ஜி. பூபாலன், எஸ். ஜோசப், எம். என். அஜய் தென்னவன், பி. செந்தில், என். நாகராஜன், டி. திவாகர், வி. சுமித், வழக்கறிஞர் எம். என். தளபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.